கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 05ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண்.1/2024
இன்
அசல் வழக்கு எண்.223/2017
----

1) கணேசன்
2) பழனியப்பன்
3) சுப்புராஜ் ... மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1) அசேபா பால்வள இணையம் அதன்
மேலாண்மை இயக்குநர்
... எதிர்மனுதாரர்/வாதி

2) சார்பதிவாளர், திருமங்கலம்
3) தாசில்தார், திருமங்கலம்
4) மாவட்ட வருவாய் அலுவலர், கலெக்டர் ஆபீஸ்,
மதுரை.
5) தமிழ்நாடு அரசுக்காக, மாவட்ட ஆட்சியர்,
மதுரை.

... எதிர்மனுதாரர்கள்/4 முதல் 7
பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 05.08.2025ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருC.மாசிலாமணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருT.தங்கசுவாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருந்த வழக்கில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளால் அசல் வழக்கின் எதிர்வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:—**

1.1) அசல் வழக்கானது கடந்த 2017ம் ஆண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை விபரத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எனவே எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**3) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்கள்/1முதல் 3 பிரதிவாதிகள் தங்களது மனுவில், அசல் வழக்கில் எதிர்வழக்குரையில் கூடுதல் விவரங்களை சேர்க்க வேண்டி திருத்தம் செய்ய வேண்டும் என்றும், எனவே அசல் வழக்கின்

எதிர்வழக்குரையில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

3.2) அசல் வழக்கானது வாதி தரப்பில் சாட்சி விசாரணை முடியும் நிலையின் போது, வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கு நிலுவையில் இருந்தது. இந்நிலையில், மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி மனுவை பரிசீலனை செய்ததில், மேற்படி சீர்திருத்தமானது மனுதாரர்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூடுதல் விவரங்கள் சேர்க்கும்விதமாக மட்டுமே மேற்படி சீர்திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மேற்படி கூடுதல் விவரங்கள் தாக்கல் செய்ய மனுதாரர்/பிரதிவாதிகள் உரிய சட்டப்பிரிவுகள் படி வழக்கை தாக்கல் செய்யவில்லை. மேலும் அசல் வழக்கானது 2017 முதல் நிலுவையில் இருந்து வரும் நிலையில், சாட்சி குறுக்கு விசாரணையின் போது, இந்த மனுவை தாக்கல் செய்ததாலும், மேற்படி வழக்கு விசாரணை பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டும், காலம் கடத்தும்விதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்/வாதி தரப்பு வாதத்தை கருத்தில்

கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.05 17:21:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இணைப்பு:

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.05 17:21:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.1/2024
இன்
அசல் வழக்கு எண்.223/2017
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 05.08.2025